பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 26 செவ்வாய்க்கிழமை (10-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 211

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

[கி-2127]

மாணவன் திவ்வியனின் கைதின் எதிரொலி

# யாழ்.பல்கலைக்கழகம் இன்றுமுதல் காலவரையறையின்றி மூடப்படும்!

## துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை அறிவிப்பு
## விடுதி மாணவர்களை வெளியேற பணிப்பு!

(யாழ்.விசேட நிருபர்)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவன் திவ்வயனை விடுவிக்ககோரி பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் எழுந்துள்ள நெருக்கடி நிலையை அடுத்து யாழ்.பல்கலைக்கழகம் இன்றுமுதல் மறு அறிவித்தல் வரைமூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சரின் கட்டளைக்கமைய பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பல்கலைக் கழகம் மூடுவது தொடர்பான அறிவித்தலை விடுத்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழ விஞ்ஞான பீட மாணவன திவ்வியன் இம் மாதம் 2 ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறைதடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சம்பவத்தைக் கண்டித்தும், அவரை விடுதலை செய்யக் கோரியும் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் கடந்த 8 நாட்களாகபகிஷ்கரிப்புப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாணவர்களின்பகிஷ்கரிப்பு மேலும் தீவிரமடைந்து வருவதை அடுத்து உயர் கல்வி அமைச்சரின் கட்டளைக்கமைய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருடைய அறிவுறுத்தலின் பிரகாரம் இன்று முதல் மறு அறிவித்தல் வரை யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதாக துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

[8-ம் பக்கம் பார்க்க]

## புலிகளை வெற்றிகொள்ள றொக்கெற் றெஜிமென்ற் படையணி உருவாகியது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை முறியடித்து,றொக்கட் தாக்குதல் மூலம் அவர்களை போரில் வெற்றி கொள்ளவென புதிய றொக்கற் றெஜிமென்ற் படையணியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் படையணியில் றொக்கற் றெஜிமென்ற் படைப்பிரிவு அமைக்கப்பட்டமை இதுவே முதற்தடவையெனவும் இப் படையணி வடக்கு கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுமெனவும் படைத்தரப்பை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இலங்கைப்படையில் புதி

(8-ம் பக்கம் பார்க்க)

## திவ்வியனை விடுவிக்ககோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

[வவுனியா]

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் கி. திவ்வியனை விடுவிக்கக் கோரி யாழ்பல்கலைக் கழக வவுனியா வளாகத்தைச் சேர்ந்த சுமார் 300 மாணவர்கள் நேற்று வகுப்புகளை பகிஷ்கரித்து சுலோகங்களை தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பல்கலைக் கழக அலுவலகத்திற்கு முன்பாக நடைபெற்றது.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேலுடனான உறவால் சமாதானப் பாதைக்கு தடை
### முஸ்லிம்காங்கிரஸ்கண்டனம்

(கொழும்பு)

இலங்கை அரசு ஸ்ரேலுடன் மீண்டும் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளமை பல சந்தேகங்களைதோற்றுவித்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் ஸ்ரேலுடன் மீண்டும் இராஜதந்திர உறவுகளை ஏற்படுததிக் கொண்டுள்ளமைசமாதானத்திற்கானபாதையை எட்டாக்கனியாக மாற்றி யுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளைகடந்தவருடம் இலங்கை இராணுவத்திற்கு ஏற்பட்ட பின்னடைவுகளின் போது ஸ்ரேலுடன் இராஜதந்திரஉறவுகளை ஏற்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சியை முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாக கண்டித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது [ந-5]

## பாலியல் வல்லுறவு படைத்தரப்பு மறுப்பு

(கொழும்பு)

மீசாலை அல்லாரைப் பகுதியில் கொடூரமான முறையில் பெண்ணொருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்திற்கும் இராணுவத்திற்கும் எதுவித தொடர்புமில்லை என பிரிகேடியர் சனத் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இராணுவத்திற்கு களங்கம்ஏற்படுத்தும் வகையில். விடுதலைப் புலிகளே இதனை திட்டமிட்டுச் செய்துளளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## ஐம்பது இந்திய மீனவர்களும் நேற்று யாழ் சிறையில் உண்ணாவிரதம்
### நீதிபதிவிக்கினராஜா நேரில்பார்வையிட்டார்

யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐம்பது இந்திய மீனவர்கள் நேற்றுஉண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்தனர்.

இவ் உண்ணாவிரதப்போராட்டம் குறித்து யாழ் சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். சிவசுந்தரம், சிறைச்சாலைகள் அத்தியட்சகருக்கும், யாழ் மாவட்ட நீதிபதி இ த. விக்கினராஜாவுக்கும் தெரியப்படுத்தினார்.

இதனையடுத்து சிறைச்சாலைக்கு நேரில் சென்ற நீதிபதி இ த. விக்கினராஜா உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும், பிரதம நீதியரசர், சட்டமா அதிபர். மற்றும் பாதுகாப்புஅமைச்சுடன்தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

அதனையடுத்து நீதிபதி மேற்கூறிய முத்தரப்பினருடனும் தொடர்பு கொண்டதன்பேரில் ஐம்பது மீனவர்களும் நேற்றைய தினம் யாழ் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு அவர்களில் 22மீனவர்களை நீதிபதி விடுதலை செய்தார். இதனை அடுத்து மீனவர்களின் உண்ணாவிரதப் போராட்டம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

**அல்லாரைச் சம்பவம்**

## பாலியல் வல்லுறவு நடந்துள்ளதாக வைத்திய அறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீசாலை அல்லாரைப் பகுதியில் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்ணின் வைத்திய பரிசோதனையை வைத்திய அதிகாரி எஸ் கதிரவேற்பிள்ளை மேற் கொண்டார்;

நேற்றைய தினம் வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்ட வைத்தியஅதிகாரி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட அடையாளங்கள் காணப்படுவதாகதனதுவைத்தியபரிசோதனை அறிக்கையில் சுட்டிக் காட்டி யுள்ளார்.

[8 ஆம் பக்கம் பார்க்க]

மாணவன் திவ்வியனின் விடுதலை

## யாழ் படைத் தளபதியுடன் பல்கலைக்கழக குழுசந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடமாணவன்கி. திவ்வியனின் விடுதலை தொடர்பாக பாதுகாப்பு படைகளின் யாழ் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலாவை நேற்று பிற்பகல் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் சந்தித்து பேச்சுநடத்தியுள்ளனர்.

பலாலி படைத்தளத்தில் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின் போது கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள திவ்வியனை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி பிணையில் விடுவதற்குரிய நடவடிக்கையெடுப்பதாக தளபதி சுசில் சந்திரபால தெரிவித்

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பூதவராயர் வீதி. திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த அருணாசலம் சிதீஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல-772052804 v) கல்வியங்காட்டுக்கும் யாழ் நகருக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர் வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [3316]

## 150 வது ஆண்டு விழா

(நல்லூர்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150-ஆவது ஆண்டு நிறைவு விழாவை 2002 ஆம் ஆண்டில் சிறப்பாகக் கொண்டாடவுள்ளதாகக் கல்லூரியின் அதிபர் என் சிவகடாட்சம் தெரிவித்தார்.

கல்லூரிப் பழையமாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இவ் விழா நடைபெறவுள்ளதாகவும் அதிபர். மேலும் கூறினார். (உ-103)

### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து சமயப் பேரவையின் பொதுக் கூட்டமும், புதிய உத்தியோகத்தர் தெரிவும் தலைவர் அருட்கவி சீ விநாசித்தம்பி தலைமையில் நேற்று முன்தினம் அளவெட்டி நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இடம்பெற்றது.

தலைவராகமீண்டும் அருட்கவி சீ விநாசித்தம்பியும், உபதலைவர்களாக மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், பேராசிரியர் க சிற்றம்பலம், க. குமாரசாமி ஆகியோரும் செயலாளராக சி. சுக்கிரீவன், உபசெயலாளராக லயன் கே.எஸ் துரைரட்ணம், பொருளாளராக கலாநிதி க. ஞானகுமரனும் தெரிவு செய்யப்பட்டவர். (உ-104)

# யாழ். பல்கலையில் பகிடிவதைக்கு மாணவர் ஒன்றியம் தடைவிதிப்பு

## மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைகழக புதுமுகமாணவர்களுக்குசிரேஷ்ட மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்டுவந்த 'ராக்கிங்' யாழ் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தினரால் தடைசெய்யப்பட்டுள்ளது

புதுமுக மாணவர்கள் சிரேஷ்ட மாணவர்களினால் பல்வேறு வகைகளிலும் துன்புறுத்துவதனைக் கருத்தில் கொண்டு மாணவர் ஒன்றியத்தினரினால் ராக்கிங்தடை செய்யப்பட்டுள்ளதெனவும் ராக்கிங் செய்வதுதண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் யாழ் பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் அறிக்கைகள் ஒட்டப்பட்டுள்ளன:

'ராக்கிங்' தடைதொடர்பான அறிக்கையினை துணைவேந்தர் அனைத்துப் பீட மாணவர்கள் மற்றும் பீடாதிபதிக்கும் மாணவர் ஒன்றியத்தினர் அனுப்பிவைத்துள்ளதாகவும் ராக்கிங்புரியும் மாணவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர். (உ-6)

## 8ஆவது நாளாக பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவனும், முன்னாள் மாணவர் ஒன்றியச் செயலாளருமான கி. திவ்வியனை விடுதலை செய்யக் கோரி இன்று எட்டாவது நாளாக பல்கலைக்கழக அனைத்துபீட மாணவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட திவ்வியனை விடுவிக்கும்வரை பல்கலைக்கழக பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடருமென்று மாணவர்ஒன்றியம் அறிவித்துள்ளது (ம)

## விபத்தில் சிக்கி தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் நேற்று அங்கு மரணமானார்;

வட்டுக் கோட்டையைச் சேர்ந்த, யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் முருகையா செல்வக்குமார் [வயது 21] என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (104)

## இந்திய மீனவர் 22 பேர் நேற்று விடுதலையாகினர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்களில் 22 பேரை யாழ். நீதவான் இ தவிக்னராஜா விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்;

இலங்கைக் கடற்பரப்பில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 50 மீனவர்களில், மனிதாபிமான அடிப்படையில் நோயாளர்கள், வாய்பேச இயலாதவர்கள்மற்றும் வயது முதிர்ந்தவர்கள்என 22 பேரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்

இம் மீனவர்களை காங்கேசன் துறையிலிருந்து கப்பல் மூலம் இந்தியகடற்படையினரிடம் ஒப்படைக்கஉதவுமாறு காங்கேசன்துறை கடற்படை உத்தியோகஸ்தர் ஜெபண்டாசுரவீராவுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-06

### வணிகர் கழகம் உதவி

(யாழ்ப்பாணம்)

கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்தியமீனவர்களுக்கு இன்று யாழ் வணிகர்கழகம் பத்தாயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை வழங்கவுள்ளது.

யாழ் நீதிமன்ற நீதிபதி இ தவிக்னராஜாவிடம் அனுமதி பெற்று யாழ் சிறைச்சாலை செல்லும் வணிகர் கழகக் குழு இன்று மாலை 4மணிக்கு உணவுப்பொருட்களை மீனவர்களிடம் கையளிக்கும். இ-06)

## அரசுக்கு ஆதரவு தருமாறு ஹக்கீமிடம் கோரிக்கை

### அமைச்சர்கள் விருந்தனர்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சர்கள் பலர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப் பேச்சு வார்த்தைகளின் போது, அரசுக்கு ஆதரவு வழங்குமாறு ரவூப் ஹக்கீமிடம அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரவூப் ஹக்கீமுடன் அமைச்சர்கள், டகளஸ் தேவானந்தா, ஆறுமுகம் தொண்டமான், சயரவீர, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரே பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இப் பேச்சு வார்த்தைகளின் போது எந்தவிதமான இணக்கப்பாடும் எட்டப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது (வ)

## சட்டவிரோத மின்பாவனை

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோத மின்பாவனை நாளுக்குநாள் அதிகரித்துவருவதாகவும் இதனால் நிரந்தர மின் பாவனையாளர் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகிவருவதாகவும் கூறப்படுகிறது. [உ-41]

## இளைஞனை காணவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டப் பகுதியைச் சேர்ந்த சகாயராசா நியூட்டன் [வயது-17] என்ற இளைஞனை கடந்த மாதம் 28ந்திகதி முதல் காணவில்லையென அவரின் தாயார் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (இ-10)

## மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி தையல் போதனாசிரியர்களுக்கான மாதாந்தக் கூட்டம் எதிர் வரும் வியாழக்கிழமை மு ப 10.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடை பெறவுள்ளது. (உ-10)

## இன்று கொடியேற்றம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை வடகிழக்குக் கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்துபதினைந்து தினங்கள் நடை பெறவுள்ளது எதிர் வரும் 23 ஆம் திகதி காலை இரதோற்சவமும் மறு நாள் மாலைகொடியிறக்கமும் இடம் பெறும். (செ-104)

## பசுவின் புலம்பல் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி - நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான மணவாளக் கோலத் திருவிழாவும்: 'பசுவின் புலம்பல்' நூல் வெளியீடும் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

அருட்கவிசீ விநாசித்தம்பிப் புலவர் இப் பசுவின் புலம்பல் நூலின் ஆசிரியராவார். (உ-104)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

ஜூன் மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட படடியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 189169 ஏ | 190968 ஏ |
| 190968 பி | 191112 ஏ |
| 193393 ஏ | 193467 ஏ |
| | 193481 ஏ |
| 193481 பி | 195262 ஏ |
| 195269 ஏ | 195295 ஏ |
| 195295 பி | 195295 சி |
| 195320 ஏ | 195330 ஏ |
| 195375 ஏ | 195381 ஏ |
| 195381 பி | 195423 ஏ |
| 195454 ஏ | 195456 ஏ |
| 195458 ஏ | 195488 ஏ |
| 195488 பி | 195488 சி |
| 195488 டி | 195503 ஏ |
| 195503 பி | 195512 ஏ |
| 195520 ஏ | 195584 ஏ |
| 195718 ஏ | 195718 பி |
| 195718 சி | 195743 ஏ |
| 195743 பி | 195746 ஏ |
| 197201 ஏ | 197207 ஏ |
| 197207 பி | 197209 ஏ |
| 197215 ஏ | 197225 ஏ |
| 197225 பி | 197238 ஏ |
| 197253 ஏ | 197256 ஏ |
| 197256 பி | 197263 ஏ |
| 197264 ஏ | 197264 பி |
| 197303 ஏ | 197303 பி |
| 197304 ஏ | 197314 ஏ |
| 197318 ஏ | 197333 ஏ |
| 197333 பி | 197333 சி |
| 197333 டி | 197333 ஈ |
| 197333 எப் | 197333 ஜி |
| 197333 எச் | 197333 எம |
| 197333 என | 197333 ஒ |
| 197333 பி | 197333 கியூ |
| 197333 யூ | 197354 ஏ |
| 197373 ஏ | 197338 ஏ |
| 197388 பி | 197464 ஏ |
| 197473 ஏ | 197473 பி |
| 197989 ஏ | 1997301 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 197315 ஏ | 197315 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 193190 ஏ | 193190 பி |
| 193190 சி | 193190 டி |
| 193422 ஏ | 193422 பி |
| 193422 சி | 195516 ஏ |
| 195592 ஏ | 195592 பி |
| 195595 ஏ | 197274 ஏ |
| 197274 பி | 197274 சி |
| 197323 ஏ | 197323 பி |
| 197323 சி | 197323 டி |
| 197323 ஈ | 197323 எப் |
| 197323 ஜி | 197323 எச் |
| 197323 ஐ | 197323 ஜே |
| 197323 எம் | 197323 என் |
| 197323 ஓ | 197352 ஏ |
| 197352 பி | 197352 சி |
| 19735 டி | 197368 ஏ |
| 197868 பி | 197392 ஏ |
| 197415 ஏ | 197416 ஏ |
| 197419 பி | 197889 ஏ |
| 197889 பி | |


## யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 12/07/2001 வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்தருணம் யாழ் மாவட்டத்திலுள்ள பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்

பழைய மாணவர் சங்கம்

[கி-2191]

## யாழ்ப்பாணம் மாநகரசபை

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

வருடாந்த உற்சவகால

தற்காலிக கடைகளை ஒழுங்குபடுத்துதல்

2001

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவ காலத்தில்கோயில்பிரதேசத்தை வர்த்தகமயமாக்காமல், அதன் புனிதத்தைப் பேணிக் காப்பதில சகலரும் ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தவிர்க்க முடியாதபடி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட விரும்புபவர்கள் 20-07-2001 ந் திகதிக்கு முன்பதாக மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இ. இராமலிங்கம்

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம்.

2001-07-09

(சி-2190)

# ஆடிக்கூழும், ஒடியற்கூழும் கூடிக் குடிக்கலாம்

# என்ற வகையில் இன்றைய அரசியல் நிலைமை

ஆடிப்பிறப்பு வருகிறது; அரிசிமாவுடன் பலங்கட்டி, பால் என்பன சேர்த்து ஆடிக்கூழ் தயாரித்தால் ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே என்று சுவைத்துக் குடிக்கலாம். அரைத்த மிளகாய், அரிசி, மிளகு, மீன், நண்டு, இறால் சேர்த்து ஒடியல் மாவில் ஒடியற்கூழ் செய்து ஆ... ஊ... என்று உறைப்புடன் சுவைத்து குடிக்கலாம் இன்னுமொரு விதமாகவும் ஒரு கூழ் செய்யலாம். அதாவது, இரண்டுவகைக் கூழ்களையும் தனித்தனியாக தயாரித்துவிட்டு பின்னர் இரண்டையும் ஒரு புதிய பாத்திரத்தில் ஊற்றிக்கலந்து அதையும் ரசிக்கலாம்;

## அடித்துப் பழுக்கவைத்தல்

நம் நாட்டு அரசியல் போலிருக்கிறதே என்று தோன்றுகிறதா? சரியேதான் பெரும்பான்மைப்பலத்தை இழந்துவிட்ட பாராளுமன்றமே புதிய பாத்திரம் பிரதான எதிர்க்கட்சி அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு பல மாதங்களாகவே ஆயத்தம் செய்து வந்தது. ஆயத்தங்கள் துரிதகதியில் முன்னேறிவந்தன. வரவுசெலவுத்திட்ட வாக்கெடுப்பின்போது அரசாங்கத்தைத் தோற்கடித்துவிடுவது என்று திட்டமிட்டார்கள். ஆனால் அதனை ஐ.தே.க அரசியற்சட்ட நுணுக்கங்களினால் கைவிட்டது. புதிய அரசு அமைக்கும் ஆவேசம் ஐ. தே. க. வினுள் ஓங்கி நின்றதால், திட்டமிட்டபடி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வராத கட்சித்தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கட்சிக்குள் உருவாகியது. அதனையும் இறுதிநேரத்தில் சரிசெய்து பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தலைமையில் மீண்டும் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை உருவாகியது. தனது தலைமைக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுவதைத் தவிர்ப்பதற்கு ரணில் அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்துள்ளார் என்று அமைச்சர் மங்கள சமரவீர இதனை கிண்டல் செய்தார் அணிதிரட்டல்கள் நடைபெற்றன. தமிழ்க்கட்சிகள் அகப்பட்டன. ம; வி. முன்னணி அகப்படவில்லை விலாங்கு மீன் போல வாலையோ, தலையையோ; பொருத்தமானதைக் காட்டி இதுவரை சமாளித்துக் கொண்டிருக்கிறது. முஸ்லிம் காங்கிரஸின் மீது ஐ. தே. கவுக்கு பெரும் நம்பிக்கையிருந்தது; அதனை அடித்துப் பழுக்கவைத்ததில் ஓரளவு பழுத்திருக்கிறது; இருந்தும் கூட ஆதரவாக 104 வாக்குகளே தேறியுள்ளது. இன்னும் ஒன்பது வாக்குகளே தேவை என்ற நிலையில் அரச தரப்பிலிருந்து அமைச்சர்கள் வருகிறார்கள், எம் பிக்கள் வருகிறார்கள் நாம் அச்சமடைவதற்கில்லை. வெற்றி நிச்சயம் என்கிறார் எதிர்க்கட்சிப் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு.

## நிறைவேற்று அதிகாரம்

மறுபுறத்தில், அடுத்த பொதுத்தேர்தல்வரை ஆட்சி செய்யும் பலம் எமக்கு இருக்கிறது முஸ்லிம் காங்கிரஸ் இல்லாமலேயே எம்மிடம் பெரும்பான்மை இருக்கிறது வாக்களிப்பு என்று வரும் போது அதனை எல்லோரும் அறிவீர்கள் என்று அமைச்சர் பௌசி கூறுகிறார். எதிர்க்கட்சியிலிருந்து பல எம். பிக்கள் வரவிருக்கிறார்கள். ம; வி; முன்னணியின் தலைவர்

**— யூகி —**

களைக் கொலைசெய்த ஐ; தே. க. வை அக்கட்சி ஆதரிக்குமா? ஐ தே. க. தப்புக் கணக்குப் போடுகிறது நாமே அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் நாட்டை ஆளுவோம் என்று பிரதமர் உட்பட அமைச்சர்கள் உரத்துப்பேசி வருகிறார்கள். ஜனாதிபதியும் அமைச்சர் மங்கள சமரவீரவும் தமக்கு பாராளுமன்றத்தினுள் பெரும்பான்மையில்லாவிட்டாலும் மக்கள் ஆணை இருக்கிறது என்றுவலியுறுத்தியுள்ளனர் அதாவது 1994 தேர்தலிலும் 2000 ஆண்டுத் தேர்தலிலும் தமக்கு 70 சதவீதமளவு பெரும்பான்மை கிடைத்தது என்றும், ஆனால் அந்தப் பெரும்பான்மையை பிரதிபலிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் தமக்கு எம் பிக்கள் இல்லை என்றும், இதற்கு ஜே ஆர். ஜயவர்த்தன அறிமுகம் செய்த தேர்தல் முறையே காரணமென்றும் தேவைப்படுமிடத்து அதனையும் மாற்றுவதற்குத் தயங்கமாட்டோமென்றும் கூறினர். சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான எஸ் பி. திசாநாயக்க, பாராளுமன்றத்தில் பெரும்பான்மையில்லாவிட்டாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டு சமாளிக்கக்கூடிய பலத்தையும் நம்பிக்கையையும் கொண்டிருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

## தேசிய அரசமைப்பு

முன்னையது இனிப்பான ஆடிக்கூழ் என்றால் பின்னையது சற்றுக்காரமான ஒடியற்கூழ் அடுத்த விடயம் மிகவும் சுவையானது. அதாவது இரு பெரும் கட்சிகளுமே தம்முடன் தனித்தனியாக பேசுகின்றன. ஆதரவைக் கோருகின்றன. தமது தரப்பு வெல்வது நிச்சயம் என்று அடித்துக் கூறுகின்றன. ஆனால் அந்த இரு பெரும் கட்சிகளுமே தமக்குள் இரகசியமாக பேசுகின்றன. என்று ம வி முன்னணி எம். பி. விமல் வீரவன்ச மூன்றாவது விடயமொன்றை அம்பலப்படுத்துகின்றார். பாராளுமன்ற அறையொன்றினுள் அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், அநுருத்த ரத்வத்தை, மங்கள சமரவீர ஆகியோர் ஐ. தே. க. வின் ரிரோன் பெர்னான்டோ, மகிந்த சமரசிங்க, ரோஹித போகொல்லாகம ஆகியோருடன் பேச்சு நடத்தியதைப் பற்றியே அப்போது வீரவன்ச குறிப்பிட்டாராயினும் ஆடிக்கூழ் காரரும். ஒடியற்கூழ் காரரும் கலந்து காய்ச்ச விரும்பும் மூன்றாவது கூழும் உண்டென்பது பலரும் அறிந்ததே, அதாவது. சிறுபான்மைக்கட்சிகளுக்கு பணயக்கைதிகளாகாமல் இருபெரும் கட்சிகளும் இணைந்து ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கவேண்டும் என்று சக்திமிக்கவர்களின் சிந்தனைப் போக்கு உள்ளது இதனை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க ஆகியோர் வெளிப்படையாக முன்வைத்திருந்தனர். இதனையும் விட சற்றுப்பரந்த அடிப்படைகொண்ட சர்வ கட்சிகளையும் அணைத்துச்செல்லும் ஒரு சர்வ கட்சி அரசாங்கம் பற்றியும் பல முக்கியஸ்தர்கள் முயற்சிகளை இப்போதும் முன்வைத்து வருகிறார்கள். பல அமைச்சர்களும். பிரதமரும் கூட இதுபற்றிக் கருத்துத்தெரிவித்துள்ளனர். அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் உதவியாளர் எவருமின்றி தனியாக பேசியதாகவும் செய்திகள் வெளியாகின. நாட்டில் நெருக்கடியை தவிர்க்க வேண்டியிருக்கிறது. அதுபற்றி பேசியிருக்கிறார்கள் என்று பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இது விடயத்தில் மிகஅதிகமான சிரமமெடுத்துக்கொள்பவர் அமைச்சர்ஜீ எல் பீரிஸ்போலிருக்கிறது. ஒரு கட்டத்தில் அவர் மகா நாயக்கர்களிடம் சென்று, கட்சிபேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபடவேண்டும் மதத்தலைவர்கள் தான் அம்முயற்சிக்கு தலைமையேற்கவேண்டும் என்றும் கேட்டிருந்தார். நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு என்ன ஆனாலும், கூட அதன் பின்னரும் சர்வகட்சி அரசு அல்லது தேசிய அரசுக்கான முயற்சிகள் தொடரும் என்று கருதலாம்.

## சுதந்திர ஆணைக்குழுக்கள்

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற் போக்கு இன்னும் வித்தியாசமானதாயிருக்கிறது. ஒக்டோபர் 19 ஆம் திகதி வரை இந்த பாராளுமன்றத்தை எப்படியோ இழுத்துக் கொண்டு போய்விடவேண்டும் என்று ஒரு உத்வேகம் ஆளும் தரப்பில் ஏற்பட்டிருப்பது தெரிகிறது நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தையே ஒகஸ்ட்மாதத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அமைச்சர் ரிச்சாட் பத்திரன முன்மொழிந்துள்ளார். இதேவேளை, ஐந்து சுதந்திர ஆணைக்குழுக்களையும் அமைத்து. ம. வி. முன்னணியின் ஆதரவைப் பெறும் முயற்சிகள் நடைபெறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பு முடிந்தளவு காலத்திற்கு ஒத்திவைத்து விட்டு அதற்கு முன்னதாக சுதந்திர ஆணைக்குழுக்கள் மசோதாவை நிறைவேற்றினால் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவு கிட்டுவதுடன், சுதந்திர ஆணைக்குழுக்களைப் பிரதான கோரிக்கையாக் கொண்டிருக்கும் கட்சிகளின் முதுகெலும்மையும் ஒடித்துவிடலாம் என்று அரசு சார்பில் கருதப்படுகிறது.

எது எப்படியிருப்பினும், சிறுபான்மையினக் கட்சிகள் மூன்று ஐ தே. க வுக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளன. முஸ்லிம் காங்கிரஸும் சிறுபான்மையினக் கட்சி. அது போல ஓ தொ. க.வும் ஈ. பி. டி. பி நுஆ என்பன அரசை ஆதரிக்கும் சிறுபான்மையினக் கட்சிகள். நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெல்லுவதற்கு இரு பெரும் கட்சிகளும் சிறுபான்மையினரின் கட்சிகளை நம்பியிருக்கின்றன. அதேவேளை, அதே சிறுபான்மைக் கட்சிகளை 'உரிய' இடத்தில் வைத்துவிட்டுத்தாம் இணைந்து ஒரு தேசிய (வாத?) அரசை அமைத்துக் கொள்ளலாம் என்றும் சிந்திக்கின்றன:

## புளொட் மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவில் உள்ள 'சமனன் குளம்' பகுதியில் புளொட் முகாம் ஒன்று நேற்று முன்தினம் இரவு 9. 40 மணியளவில் இனந்தெரியாதோரால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது

இத்தாக்குதல் ஐந்துநிமிடம் வரை நீடித்ததாகவும் பலத்த வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் மின்வெட்டு அமுலில் இருந்த போதே இத்தாக்குதல் இடம்பெற்றது. இதன் போது ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

## பொன்னாடை போர்த்திக் கௌரவம்

(நல்லூர்)

கோண்டாவில் வடக்கு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவசுவாமி தேவஸ்தான பிரதம குரு. சிவஸ்ரீ ஆறுமுகக் குருக்களின் பெரும் பணியைப் பாராட்டி அண்மையில். மேற்படி தேவஸ்தானத்தில் நடாத்தப்பெற்ற கௌரவிப்பு வைபவத்தின் போது, மகாவித்துவான். கலாரத்னா கலாபூஷணம் இணுவில்பிரம்மஸ்ரீஎன் வீரமணி ஐயர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, ஆறுமுகக் குருக்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

மேற்படி தேவஸ்தானத்தின் அலங்கார உற்சவத்தின் போது, ''பெரியபுராணத்தில் வாழ்வியல்'' என்ற பொருளில் தொடர் விரிவுரை நிகழ்த்திய சைவசித்தாந்த பண்டிதர் செல்வன் தசிதரனுக்கு. சிவஸ்ரீ ஆறுமுகக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (உ-103)

## பஞ்சபுராணம் ஓதல் போட்டி

(யாழ்ப்பாணம்)

முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமியின் 16 வது குருபூசையை ஒட்டி மாணவர்களிடையே பண்ணுடன் பஞ்சபுராணம் ஓதுதல், பேச்சுப்போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் இம்மாதம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்று குரு பூசைத் தினமான 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பரிசில் வழங்கப்படும். (உ)

## இசைநடன வகுப்புகள்

(நல்லூர்)

கோண்டாவில் வடக்கு கல்வி வளர்ச்சிக் கழகத்தினர் கழக மாணவர்கள் மத்தியில் கலை, கலாசாரம், பண்பாடு, சமயம் என்பவற்றை வளர்க்கும் முகமாக இசை-நடன வகுப்புகளை நடத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (உ-103)

## அழகுபடுத்தல்

[நல்லூர்]

திருநெல்வேலிச் சந்திப் பகுதியில், கண்கவரும் மலர்ச்செடி, கொடிகள் நாட்டிச் சிறந்த முறையில் அழகுபடுத்துவதற்கான நடவடிக்கையை, நல்லூர்ப் பிரதேச சபையினர் மேற்கொண்டுள்ளனர். [உ-103]

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சுகாதார கற்கைகள் அலகினால் நேற்று நடத்தப்படவிருந்த நேர்முகத் தேர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என சுகாதாரக் கற்கைகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்தார். (உ-104)

## கொக்குவில்இந்து மயானம் நவீன மயப் படுத்தப்படும்

(நல்லூர்)

நல்லூர்ப் பிரதேச சபையின் பரிபாலனத்துக்கு உட்பட்ட கொக்குவில் இந்து மயானம், பயனாளிகளின் நலன்கருதி நல்லூர்ப் பிரதேச சபையினால் நவீன மயப்படுத்தப்படவுள்ளது.

எனவே தற்போது மயானப் பகுதியில் காணப்படும் செடி, கொடி, பற்றைகள் என்பன அழிக்கப்பட்டு வருகின்றன. (உ-103)

## ஆலய ஒலிபெருக்கிகளால் மாணவர்களுக்குஇடைஞ்சல்

(கோப்பாய்)

அதிகாலை வேளையில் ஆலயங்களில் ஒலிபெருக்கிகள் பாவிக்கப்படுவது பரீட்சைகளுக்காக பாடங்களைப் படிக்கும் மாணவர்களுக்குப் பெரும் இடைஞ்சல்களை ஏற்படுத்துவதாகவும்,

இது குறித்து பாதிக்கப்பட்ட பலர் தன்னுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் வலிகிழக்கு பிரதேச சபைத் தலைவர் கே. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதனைத் தடுப்பதில் பாடசாலை அதிபர்களின் ஒத்துழைப்பைத் தான் கோருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்; (உ-79)

## போலி ஆதாரம் காட்டி நிவாரணம் பெற்றால் சட்ட நடவடிக்கை

### அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

போலித் தகவல்களை சமர்ப்பித்து சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களுக்கும், அவர்களுக்கு ஒத்தாசை புரிபவர்களுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென சமுர்த்தி அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது

நாட்டில் 51 வீதமானோர் சமுர்த்தி நிவாரணம் பெறுவதாகவும் அவற்றில் 12 வீதமானோர் போலித் தகவல்களைச் சமர்ப்பித்தே நிவாரணத்தைப் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது:

இதனை அடுத்து பிரதேச செயலகங்களுக்கு, வழங்கப்படும் சமுர்த்தி நிவாரணத்தில் 20 வீதம் குறைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (உ-5)

## திருடர்கள் மடக்கிப் பிடிப்பு

(மந்திகை)

வீட்டினுள் நுழைந்து திருட முற்பட்டவர்களைப் பொதுமக்கள் மடக்கிபிடித்து படையினரிடம் ஒப்படைத்த சம்பவம் அண்மையில்மந்திகை மடத்தடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது; (உ-23)

# இடப்பெயர்ந்த சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்

## மெதடிஸ் திருச்சபை ஏற்பாட்டில்

(புலோலி)

பருத்தித்துறை துன்பகள நேசகத்தில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள சிறார்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டமொன்றை மெதடிஸ்த திருச்சபை மேற்கொள்ளவுள்ளது.

நேசகம் பகுதியில் உள்ள அகதிமுகாம்களைச் சேர்ந்த 50 சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை மெதடிஸ்த திருச்சபை குருவான அருட் திரு. சதீஸ் அடிகளார் இச்சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (உ-52)

## கடைகள் வாடகைக்கு

(நல்லூர்)

திருநெல்வேலி பொதுச் சந்தையின் 16 உட்புற வெளிப்புறக் கடைகள் நல்லூர்ப் பிரதேச சபையினால் வாடகைக்கு விடப்படவுள்ளன.

## கும்பாபிஷேகம்

[புலோலி]

தென் புலோலி புற்றளைச் சித்திவிநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர் வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (உ-52)

## யாழ். மாநகரசபைக்கு மருத்துவ உபகரணங்கள் யுனிசெவ் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தினால் யாழ். மாநகரசபைக்கு 5 இலட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கான பாதுகாப்பு அனுமதி கிடைக்கப்பெற வில்லை எனவும்,

அனுமதி கிடைத்தும் அவை மாநகரசபையின் சுகாதாரப் பிரிவுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் முதல்வர் என். ரவிராஜ் தெரிவித்தார்.

இதேவேளை, ஜேர்மன் நாட்டின் உதவித்திட்டத்தின் கீழ் அன்பளிப்புச் செய்யப் பட்ட தையல் இயந்திரங்கள் மூலம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்களுக்கான தையல் பயிற்சித் திட்டமொன்று வரும் மாதம் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ-10)

## வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு தொழில், மொழிப் பயிற்சி

(கொழும்பு)

தொழில் வாய்ப்பில்லாத பட்டதாரிகளுக்கு தொழில் ரீதியான மற்றும் மொழி தொடர்பான விசேடபயிற்சி வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இப்பயிற்சி நெறிமூலம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுப்பதே அரசின் நோக்கமாகும்.

பயிற்சி நெறிகளுக்கான நிதியினை, ஜனாதிபதியின் கீழுள்ள தகைமைகள் அபிவிருத்தி நிலையம் வழங்குவதென தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 25 ஆயிரம் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## பாடசாலை மாணவர்கள் பிறப்புச் சான்றிதழ் பெற பிரதேச செயலர் ஏற்பாடு

[கோப்பாய்]

பிறப்புச் சான்றிதழ் இல்லாத மாணவர்கள் தன்னுடன் தொடர்பு கொண்டால் இலவசமாகவும், விரைவாகவும் அதனைப் பெற்றுக் கொடுக்க முடியுமென செய்யப்படும் எனவும், கண்பார்வை குறைந்த மாணவர்கள் கோட்டக் கல்வி அலுவலகம் ஊடாக மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பித்தால் இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்,

கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி பணிமனைக்கு வலி கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் க. தேதீஸ்வரன் அறிவித்துள்ளார். [உ-9]

## வடமராட்சி கிழக்கில் 3 சந்தைகள் அமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபை வடமராட்சி கிழக்கில் சுமார் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் குடத்தனை, பொற்பதி, மணற்காடு ஆகிய மூன்று கிராமங்களிலும் மூன்று சந்தைகளை நிர்மாணித்துள்ளது.

குடத்தனை மீன் சந்தையைப் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஜ ஸ்ரீரங்கேஸ்வரனும்,

பொற்பதியிலும், மணற்காட்டிலும் நிர்மாணிக்கப் பட்ட சந்தைகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி. பி. வேலாயுதபிள்ளையும் அண்மையில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தனர்.

இம் மூன்று சந்தைகளுக்கு மான நிதி உள்ளூராட்சி அமைச்சிலிருந்து பருத்தித்துறை பிரதேசசபையால் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-52)

## ஆரம்பக் கல்விபோதிக்கும் ஆசிரியர் பற்றாக்குறை

(முசம்பியன்பற்று)

மணற்காடுறோ. க. த. க. பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் போதிப்பதற்கு ஆசிரியர்பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாகக் கடமையாற்றிய வர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அனுமதிகிடைத்துச் சென்று விட்டதனாலேயே இப் பற்றாக்குறை தோன்றியுள்ளது.

இப் பாடசாலையில் தரம் 1, 2, 3, ஆகியவற்றுக்கான செயற்பாட்டறை இன்னும் அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-42)

## இராசிபலன்

10-07-2001
(ஆனி 26, செவ்வாய்)
பஞ்சமி பி.இ 5 36 வரை
சதயம் மு.இ 8 21 வரை
இராகுகாலம் 2.58- 4.28
நல்லநேரம் 10.28- 11.58

**மேடம்**
நண்பர்கள்சந்திப்பு, காரிய நன்மை, கௌரவம், தனலாபம்.

**இடபம்**
தொழில் வெற்றி, அதிகாரம், உற்சாகம், முயற்சி ஜெயம்.

**மிதுனம்**
புதிய திட்டம், அச்சமான நிலை, திடீர் நன்மை, பிரயாணம்.

**கடகம்**
உறவினர்வெறுப்பு, வியாதி, பிரயாண பயம், காரியதடங்கல்.

**சிங்கம்**
சுவாரஸ்யம், மதிக்கப்படுதல், முயற்சி கைகூடும், தனவரவு.

**கன்னி**
வியாதி குணமடையும், பகைவர்விலகுவார், தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி.

**துலாம்**
தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, காரிய இடையூறு, குடும்பக் கவலை.

**விருச்சிகம்**
உறவினர் மனஸ்தாபம், கல்வி மேன்மை, அதிகாரிகள் வெறுப்பு, காரிய தாமதம்.

**தனுசு**
பிரயாணம், வாக்கு மேன்மை, காரிய நன்மை, தனவரவு.

**மகரம்**
பொருள் விரயம், மாதர் நட்பு, விவாதம், காரியதாமதம்.

**கும்பம்**
ஜனவசியம், நல்லமுயற்சி, போசன சுகம், சயன சுகம்.

**மீனம்**
பிரயாணம், தனவிரயம், மனக்கிலேசம், பிதாசிந்தை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## 35 வீரர்கள் இன்று திருமலை புறப்பாடு

[யாழ்ப்பாணம்]

மாகாண மட்டமெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொள்வதற்காக 35 வீரர்கள் உட்பட 45 பேர் கொண்ட குழுவினர் இன்று திருக்கோணமலை செல்லவுள்ளனர்.

விளையாட்டுத்துறைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள இப்போட்டியில் யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் 1 ஆம், 2 ஆம் இடங்களைப் பெற்ற வீரர்கள் மேற்படி குழுவில் இடம்பெறுகின்றனர்.

இவர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் திருக்கோணமலையில் நடைபெறவுள்ளன.

இவ் வீரர்கள் யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி ரூபசிங்கம் தலைமையில் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. [உ10]

## வீதியால் சென்ற இளைஞர் வீணரால் தாக்கப்பட்டார்

[புலோலி]

வீதியால மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞரொருவர், சைக்கிளில் வந்தவர்களால் பொல்லுகளால் கடுமையாகத் தாக்கப்பட்டுப் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரணவாய் மத்தியைச் சேர்ந்த பி ஜெபகரன் [வயது 25] என்பவரே உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அண்மையில் வைத்து இவ்வாறு தாக்கப் பட்டவராவர்.

ஆலயமொன்றில் இடம்பெற்ற விழாவில் ஏற்பட்ட தகராறின் எதிரொலியாகவே இந்த இளைஞர் தாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது. [உ-52]

## தொழில்நுட்பக்கல்லூரியில் நேர்முகப்பரீட்சை சபை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

தொழில் நுட்பக்கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் வடக்கு- கிழக்கு மாகாண பிராந்திய பணியகத்தில் தொழில்நுட்பக் கல்லூரி அமைய ஊழியர்களின் நிரந்தர நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சையை முதற்தடவையாக யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்ற வகையில் ''நேர்முகப்பரீட்சைச்சபை'' அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இச்சபையின் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் என் போகராஜன், தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் எஸ் செந்தில்நாதன், மற்றும் யாழ் அரச அதிபரின் சார்பில் இலங்கை நிர்வாக சேவைத் தரத்திலான ஒருவர் இணைக்கப்பட்டுள்ளனர்.

நூலக உதவியாளர், ஆய்வுகூட உதவியாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, தொழிலாளி போன்ற பதவிகளில் உள்ளவர்களுக்கே இங்கு நிரந்தர நியமனத்திற்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

நீண்டகாலமாக நிரந்தர நியமனம் வழங்கப்படாதிருந்த மேற்படி ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்துக்கு முறையிட்டதை அடுத்தே இப்புதிய ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதே நேரம், நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு கொழும்பில் இப் பரீட்சை நடத்தப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ 6)

## தேவாரப் பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(நல்லூர்)

சோண்டாவில் வடக்கு ஸ்ரீ ஞானவைரவ சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவ விழாவையொட்டி, ஆலய தொண்டர் சபையினால் அண்மையில் நடத்தப் பெற்ற தேவாரப் பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:-

கீழ்ப்பிரிவு:-
1 ஆம் இடம்- க.பிரசாளினி,
2 ஆம் இடம்- பா. கீர்த்திகா
3 ஆம்இடம்-சி. ஹம்சப்பிரியா

மத்திய பிரிவு:-
1 ஆம் இடம்- ச. நிரஞ்சினி,
2 ஆம் இடம்-கு. தாட்சாயினி
3 ஆம் இடம்- ப சிந்துஜா;

மேற் பிரிவு:-
1 ஆம் இடம்- ச. சஜிதா.
2 ஆம் இடம்- சி. தர்சிகா
3 ஆம் இடம்- மா .தர்சினி

(உ-103

## மைற்ஸ் கொல்லி மருந்து இலவச வினியோகம்

(யாழ்ப்பாணம்)

தென்னைகளைத் தாக்கி வரும் மைற்ஸ் நோயின் தாக்கத்திலிருந்து விடுபட தீவுப்பகுதி தென்னைச் செய்கையாளர்களை தத்தம் பகுதி கிராம உத்தியோகத்தரிடம் தொடர்பு கொண்டு உடனே மைற்ஸ் கொல்லி மருந்தினைப் பெறுமாறு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

இம் மருந்தினை தென்னை மரத்தின் பாளைகள், குலைகள், குரும்பட்டிகள் முழுவதும் நனையத்தக்கதாக விசிறி, தேங்காய் உற்பத்தியைக் கூட்ட உழைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தவிர இலவச மைற்ஸ் கொல்லி மருந்து, மற்றும் ஆலோசனைகளைப் பெற விரும்புவோர் ஜெ. சத்தியேந்திரன், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநல சேவைக்கட்டடம், நல்லூர் எனும் முகவரியுடன் தபாலில் தொடர்பு கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இன்று ஒரு தகவல்

# வாழ்க்கை நாடகம்

இந்த உலகம் ஒரு நாடக மேடை அதில் நாம் எல்லோரும் நடிகர்கள் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது உலகம் போகிற போக்கைப் பார்த்தால் அது நூற்றுக்கு நூறு உண்மை என்பது நன்றாகப் புரிகிறது. ஏனென்றால் இப்போது யாருமே உண்மையாக நடந்துகொள்வதாகத் தெரியவில்லை. எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில் நடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதுவும் இந்த நாடகத்தில் வில்லன்கள் தான் அதிகம், ஆனால் அவர்களெல்லாம் தங்களைக் கதாநாயகர்களாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் பரிதாபம் இந்த உலகம் ஒரு நாடக மேடை என்று பெரியவர்கள் சொன்னதற்கு அர்த்தம் வேறு அது வேதாந்தம்.

வாழ்க்கை என்கிற நாடகத்தில் நாம் ஆரம்பத்திலிருந்து கடைசி வரைக்கும் ஒரே பாத்திரமாக இருப்பதில்லை பல விதமான பாத்திரங்களை ஏற்க வேண்டியிருக்கிறது ஒரு நாடகத்தில் நடிக்கிற போது என்ன வேஷம் போட்டுக் கொள்கிறோமோ. அதற்குத் தகுந்தமாதிரி நடந்துகொள்ள வேண்டுமல்லவா? ராஜா வேஷம் போட்டுக் கொண்டு சேவகன் மாதிரி நடந்துகொள்ளக் கூடாது. அது மாதிரி வாழ்க்கையிலும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற பாத்திரத்திற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும்;

அது தெரியாததினால்தான் பலர் நிம்மதி இல்லாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது வாழ்க்கையில் அவ்வப்பொழுது வெவ்வேறு பாத்திரங்களாக மாறிக்கொண்டேயிருக்கிறோம். உதாரணத்துக்கு ஒருவரைப் பார்ப்போம். காலையில் அலுவலகத்துக்குப்போகிற வரைக்கும் அவர் ஒரு மனைவியின் கணவர்; குழந்தையின் தகப்பனார், சரி அவர் புறப்பட்டு அலுவலகம் போய்ச் சேருகிறார். அங்கு போன பின்னர் அவர் ஒரு அலுவலர். கணவர், தகப்பனார் என்கிற வேஷம் கலைந்து அவர் அலுவலர் என்கிற பாத்திரத்தை ஏற்றுக் கொள்கிறார்.

அலுவலகத்துக்குப் போன பின்னர் அங்கே இருக்கிறவர்களிடம் நான் உங்கள் அப்பா, தாத்தா என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. அலுவலர் வேஷத்திலிருந்து கொண்டு அப்பா மாதிரி நடந்து கொள்ளக் கூடாது. மகனே! நான் கொடுத்த விஷயம் தட்டெழுத்தாகி விட்டதா என்று கொஞ்ச ஆரம்பித்தால் 'போப்பா உனக்கு வேறே வேலையில்லை, என்று சொல்லி விட்டுப் போய் விடுவார். அது மட்டுமில்லை. போகிறதற்கு முன்னர் 'சினிமா பார்க்கிறதற்கு காசு கொடு' என்று கேட்டாலும் கேட்பார். இவர் அப்பா மாதிரி நடந்து கொள்கிற போது அவர் மகன் மாதிரி நடந்து கொள்ளக் கூடாதா?

வாழ்க்கையில் நாம் குழப்பம் அடைவதற்குக் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்? எந்தப் பாத்திரத்தில் இருக்கிறோமோ அதற்குத் தகுந்த மாதிரி நடந்துகொள்ளாததினாலேதான்! அலுவலகத்தை விட்டு மாலையில் வீட்டிற்குத் திரும்பினவுடனே மறுபடியும் கணவனாகவும், தகப்பனாராகவும் மாறி விட வேண்டும். ஆனால் அப்படிப் பலர் மாறுகிறதில்லை; அங்கேயும் அலுவலர் மாதிரி நடக்க ஆரம்பிக்கிறார்கள். பின்னர் வசமாக வாங்கிக்கட்டிக் கொண்டு அவஸ்தைப் படுகிறார்கள் இவையெல்லாம் எதனால்? வேஷத்துக்கு தகுந்த மாதிரி நடந்து கொள்ளத் தெரியாததினாலேதான்! ஏன்? நீங்கள் பெரிய அலுவலர் தான், இல்லையென்று சொல்லவில்லை மாலையில் வீட்டுக்குப்போகிறீர்கள்.

உங்கள் சம்சாரம் வீட்டுக்கு வேண்டிய பொருட்களெல்லாம் என்ன என்ன என்று சொல்லுகிறார் அதைக் கேட்டுக் கொண்டு போய் ஒரு கடையில் வாங்கிக் கொண்டு வந்து கொடுக்க வேண்டியது தானே! அதை விட்டு விட்டு, இதோ பார் நீ இப்படியெல்லாம் வாயால் சொல்லாதே எல்லாவற்றையும் டைப் பண்ணிப் ஃபைலிலே போட்டுக் கொண்டுவா! 'என்று சொன்னால் வாங்கிக் கட்டிக் கொள்ளாமல் வேறு என்ன செய்வீர்கள்? வீட்டிற்குத் திரும்பிய பின்னரும் கணவனாகவோ தகப்பனாராகவோ மாறாமல் அலுவலராக இருக்கிற பலர் இருக்கத்தான் செய்கிறார்கள் 'வீட்டில் இருக்கிறவர்கள் மேலே சிடு சிடு என்று விழுகிறது மனைவி குழந்தை கிட்ட வருகிறதற்கே பயந்து ஒதுங்குகிற நிலைமை உங்களுக்கும் கஷ்டம் அவர்களுக்கும் கஷ்டம்.

உங்களுடைய உண்மையான பாத்திரம் பிரம்மம் அல்லது ஆத்மா உங்களுக்கு உடம்பு இருக்கிறது மனம் இருக்கிறது ஆனால் நீங்கள் உடம்போ மனமோ இல்லை, இந்தப் பாத்திரத்துக்கு ஏற்ற மாதிரி நடக்க வேண்டும் என்றால் அதற்குப் பயிற்சி தேவை பயிற்சிக் காலத்தில் பல கட்டுப்பாடுகள் இருக்கத்தான் செய்யும் கார் ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் கூடக் கட்டுப்பாடு இருக்கிறதல்லவா. அது மாதிரி கார் ஓட்டக் கற்றுக் கொண்ட பிறகு நீங்கள் காரிலேயே உட்கார்ந்து கொண்டு இருக்க வேண்டுமென்பதில்லை எங்கே வேண்டுமென்றாலும் சுற்றலாம் அதே மாதிரி உங்கள் ஆன்மீகப் பயிற்சி முடிந்தவுடன் நீங்கள் உலக காரியங்களில் பங்கெடுத்துக் கொள்ளலாம் அப்போது உலகம் உங்களோடு ஒட்டிக் கொள்ளாது.

பாத்திரத்திற்குத் தகுந்த மாதிரி நடிக்கவேண்டியதைப் பற்றி இதுவரைக்கும் பேசிக் கொண்டிருந்தோம். காசுக்குத் தகுந்த மாதிரி நடிக்கிறதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வில்லியம் கில்லெட் என்ற அமெரிக்க நடிகர் ஒருவர் சின்ன வயதிலேயே நாடகக் கம்பனியில் சேர்ந்து நடித்துக் கொண்டிருந்தார். ஒரு நாடகத்திலே இவர் சாகிற மாதிரி ஒரு காட்சி. இவர் நடித்தார் நாடகக் குழு நிர்வாகிக்கு இவர் நடிப்பில் திருப்தி இல்லை. என்ன சார்! சாகப் போகிற மாதிரி நடிக்கவேண்டிய நீங்கள் அந்தச்சமயத்தில் சிரித்துத் தொலைக்கிறீர்களே! சுத்த மோசம் என்றார். அதற்கு அந்த நடிகர் 'நீங்கள் கொடுக்கிற சம்பளத்தைப் பார்த்தால், அதை வாங்கிப் பிழைக்கிறதை விட இப்படிச் சிரித்துக்கொண்டே சாகிறது எவ்வளவோ மேல். இல்லையா என்றார். □

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

---

### விஷமிகளின் தீயசெயலை அடுத்து

# சவுக்கம் காட்டுக்கு காவலாளிகள்

# நியமிக்க சூழலியலாளர் பரிந்துரை

(செப்பியன்பற்று)

மணற்காட்டில் அமைந்துள்ள சவுக்கம் காட்டுக்கு காவலர்கள் நியமிப்பது அவசியமென சூழலியலாளர்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

விறகு வியாபாரிகள் பலரும் தமது விறகுத் தேவைக்காக சவுக்கம் காட்டுக்குத் தீமூட்டி அழிக்கும் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால் அதனைத் தவிர்க்கும் வகையிலேயே காவலாளிகள் நியமிக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இது பற்றி இப்பகுதி பிரதேச செயலரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சவுக்கங்காட்டிற்கு விஷமிகள் மூட்டிய தீ அப்பகுதி மக்களால் அணைக்க இயலாது கடந்தசில தினங்களாக எரிந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-42)

## இலவச வெளியீடு

(நல்லூர்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால், திருநாவுக்கரசர் அருளிய, திருமறைக்காட்டுத் திருப்பதிகமான 'பண்ணினேர் மொழியாள்' என்ற பதிகம், அச்சிடப்பட்டு, புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக விழாவின்போது அடியார்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது

மாணவர்கள், அடியார்கள் எனப்பலர் இதனைப் பெற்றுப் பயனடைந்துள்ளதாக. மன்ற அமைப்பாளர் சி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார். (உ-3)

## தமிழர்கள் பாபாவை வழிபடக் கூடாது

(கொழும்பு)

விடுதலைப்புலிகள்சார்பில் இலத்திரனியல் ஊடகமான 'சேர்க்கிள் டைஜஸ்ற்' யூலை 4 ஆம் திகதி வெளியீட்டில், தமிழ்காவலன் என்பவர் வரைந்துள்ள கட்டுரையில் தமிழர்கள் பகவான் சத்திய சாயிபாபாவை வணங்கக் கூடாது என்று குறிப்பிடப் பட்டுள்ளது (உ)

## வீதி திருத்தம்

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபைப்பகுதியில் உள்ள கெருடாவில் பாடசாலை வீதி சுமார் 2 இலட்சம் ரூபா செலவில் திருத்திப்புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது (து-52)

## அலுவலகம் திறப்பு

(புலோலி)

வல்வெட்டித்துறை நெடிய காட்டுப் பகுதியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன், தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் எஸ் மணிபல்லவராஜன் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தார். (உ-52)

## கட்டடம் புனரமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியில் உள்ள கெருடாவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் சுமார் 75 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி இவ்வருடத்திற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ-52)

## தென்மராட்சியில் மீளக்குடியமர விரும்புவோரது விபரங்கள் திரட்டப்படுகின்றன

(வட்டுக்கோட்டை)

தென்மராட்சிப் பகுதியில் மீளக்குடியமர விரும்புகின்ற மக்களின் விபரங்கள் சம்பந்தப்பட்ட பகுதி கிராம அலுவலர்களினால் சேகரிக்கப் பட்டு வருகின்றன.

அப்பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத தென்மராட்சி, பளைப் பிரதேச செயலர் பிரிவு மக்களின் விபரங்களே இவ்வாறு திரட்டப்பட்டு வருகின்றன.

51 வது படையணியின் கட்டளை அதிகாரியின் பணிப்பின் பேரிலேயே மேற்படி விபரங்கள் திரட்டப்படுகின்றன. (உ-24)

## தொண்டராசிரியர் பெயர் விபரங்கள் வலயங்களில் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற தொண்டர் ஆசிரியர் நேர்முகத் தேர்வில் தோற்றியவர்களின் வலய மட்ட நிலை, மாவட்டமட்ட நிலை, புள்ளிகள் தேர்வு செய்யப்பட்ட பாடநெறி என்பவற்றின் பிரதிகள் யாழ் மாவட்டத்தில் உள்ள 5 வலயப் பணிமனைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவை வலயக் கல்விப் பணிமனைகளின் விளம்பரப் பலகைகளில் ஒட்டப்பட்டிருப்பதாகவும்,

தொடர்புடைய தொண்டராசிரியர்கள் இவைகளைப் பார்வையிடலாம் எனவும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என் தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை,

ஆசிரிய சேவையில் உள்வாங்கப்படவுள்ள தொண்டர் ஆசிரியர்களின் விபரம் கூடிய விரைவில் வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

## வல்வை வைத்தியசாலையில் ஆண்கள் உணவுக் கூடம் திறந்து வைப்பு

(புலோலி)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆண்களுக்கான உணவுக் கூடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த உணவுக்கூடத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை வல்வெட்டித்துறை நகரசபை வழங்கியிருந்தது.

மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயிலேறும் பெருமாள் தலைமையில் பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம் (நந்தி) மேற்படி உணவுக்கூடத்தைத் திறந்து வைத்தார். (உ-52)

## யாழ். மாநகர சபைக்கு கணனி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்கு கொழும்பு வர்த்தகர் ஒருவர் கணனியினை அன்பளிப்புச் செய்துள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் வர்த்தகரான கே. மதிவாணர் என்பவர் அன்பளிப்பாக வழங்கிய மேற்படி கணனி யாழ். மேயரினால் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபைக்கு கணனியின் தேவைப்பாடு குறித்து பல தடவைகள் அரசு. மற்றும் பொது அமைப்புகளின் கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## பொ. ஐ. முன்னணி பா. உறுப்பினர்களுக்கு கார் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் 27 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கார்கள் வழங்கப்படவுள்ளன.

நிதி அமைச்சின் செயலாளரின் உத்தரவின்பேரில் சுங்கத் திணைக்கள உதவிப்பணிப்பாளர், கார்கள் வழங்கப்படவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவற்றைப் பொறுப்பேற்குமாறு அறிவித்துள்ளார்.

எஸ் ஜெகதீஸ்வரன், எஸ், சிவதாசன் எஸ். குணசேகரம், எம். சிவலிங்கம் கே. மாரிமுத்து, கே.வி. குகேந்திரன், எஸ். தவராசா ஆகிய தமிழ் எம்.பிக்கள் இவர்களில் அடங்குவர். (உ

## சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிக்கு கொலைமிரட்டல்

(சென்னை)

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அசோககுமாருக்கு கொலை மிரட்டல் விடுக்கப் பட்டமைக்கு எதிராக தக்க நடவடிக்கை மாநில அரசு எடுக்கவேண்டும் என்று மத்திய ஊடகத்துறை அமைச்சர் ரெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

சென்னை மேம்பாலஊழல் வழக்குத் தொடர்பாக விசாரித்து வரும் நீதிபதி அசோக்குமார் குடும்பத்துக்கு கொலை மிரட்டல்கள் வந்துள்ளதாகவும்பாதுகாப்புக் கோரியும் அவரது மகன் பிரதமர் வாஜ்பாய்க்கு எழுதிய கடிதத்தில குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசு இந்த விடயத்தில் கருந்த நடவடிக்கை எடுத்து நீதிபதி குடும்பத்துக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று மத்திய மந்திரி ரெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார். (து)

## நினைத்தபோது இணைய - விலக தே.ஜ.மு. ரயில் பெட்டியல்ல

### தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி சீற்றம்

(சென்னை)

சில அரசியல் கட்சிகள் தேவைப்பட்ட போது நுழைந்து கொள்வதற்கும், தேவைப்பட்ட போது விலகிக் கொள்வதற்கும் தேசிய ஜனநாயக முன்னணி வெறும் ரெயில் பெட்டியல்லவென்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ஜனா கிருஷ்ண மூர்த்தி கூறியுள்ளார்.

திருநாமுல் காங்கிரஸ் மீண்டும தேசியஜனநாக் கூட்டணியில் சேர்வதற்குரிய வாய்ப்புக்கள் குறிகதுபத்திரிகையாளர் ஒருவர் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தொடர்கையில் எல்லாக் கட்சிகளும் தேசிய ஜனநாயகக்கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படலாமென்றாலும், சில காரணங்களுக்காகத் தேசிய ஜனநாயகக் கூட்டணியிருந்து விலகிய கட்சிகளைச் சேர்த்துக்கொள்வதில் சிரமம் இருக்கிறதென்றும், மற்றக் கட்சிகள் எல்லாம் விரும்பும் பட்சத்தில் தான் மீண்டும் சேர்த்துக் கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மமதா பானர்ஜியின் திருநாமுல் காங்கிரஸைச் சேர்ப்பதென்றால் எச்சரிக்கைஉணர்வுடன் செயற்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார். (து)

## 11வயது பலஸ்தீன சிறுவன் சுட்டுக் கொலை

### வன்முறை வெடிக்கும் அபாயம்

[ஜெருசலேம்]

மத்திய கிழக்கு காஸாப் பகுதியில் 11 வயது பலஸ்தீனச் சிறுவன் இஸ்ரேலியப் படையினரால சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான்.

இச்சம்பவத்திற்கு பழி வாங்கும் நோக்கில் இஸ்ரேலிற்கு எதிராக தாக்குதல் நடத்த 10தற்கொலைக் குண்டு தாரிகளை அனுப்பப் போவதாக ஹமாஸ் தீவிரவாத இயக்கம் அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

இதனால் இஸ்ரேல் மீது எந்த நேரத்திலாவது தற்கொலை குண்டுத்தாக்குதல் இடம்பெறலாம் என்ற பீதி நிலவிவருகிறது (உ-7)

## உலக தரிசனம்

## அமெரிக்க படையினர் ஜப்பானில்தங்கி இருக்கும் ஒப்பந்தம் மீளாய்வு

(டோக்கியோ)

அமெரிக்க இராணுவ வீரர்கள் ஜப்பானில் தங்கியிருப்பதை அனுமதிக்கும் ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்பட உள்ளதாக ஜப்பானியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மீளாய்வு செய்யப்படும் வரை தற்போதுள்ள ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, இம்மாதம் 23 ஆம் திகதி டோக்கியோவிற்கு விஜயம் செய்யவுள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் இது தொடர்பாகபேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-9)

## எயிட்ஸ் தாக்கத்தினால் வருடாந்தம் 2ஆயிரம்பேர் சிம்பாபேயில் இறப்பு

(ஹெராரே)

சிம்பாபேயில வருடம் ஒன்றுக்கு குறைந்தது 2 ஆயிரம் பேர் எயிட்ஸ் நோயால் மரணமாகின்றனர் என்று சிம்பாபேயின் அரசாங்கப் புள்ளிவிபர ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகிலேயே எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட நாடுகளில் சிம்பாபே முன்னிலையில உள்ளதுடன் அந் நோயால் இறப்பவர்களின் தொகையும் அதிகமாக உள்ளது

அதனால் இந் நோயால் இறந்தோரைப் புதைப் தற்கு இடம்நெருக்கடி காணப்படுவதாகவும ஒரேகுழியில் இருவரைப் புதைப்பது பற்றி ஹெராரே மாநகர சபை ஆலோசித்து வருகிறது என்றும் தெரிவித்துள்ள ஆய்வாளர்கள், கறுப்பினப் பெரும்பான்மையினர் இவ்வாறு புதைப்பதற்கு எதிர்புத் தெரிவித்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-7)

## இந்தியா வரவுள்ள பாக். ஜனாதிபதிக்கு செங்கம்பள வரவேற்பு

(புதுடில்லி)

எதிர்வரும் 14 ஆம் திகதி உயர் மட்டப் பேச்சுக்களுக்காக புதுடில்லி வரவுள்ள பாகிஸ்தான் அதிபர்முஷாரப்பிற்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் 14 ஆம் திகதி விசேட விமானம் மூலம் புதுடில்லி வரவுள்ள முஷாரப்புடன் அவரது மனைவி, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துர் சத்தார் மற்றும் சில அமைச்சர்களும் வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## செய்திப்பரல்

★ மெக்ஸிகோவில் ஏற்பட்ட ரயில் விபத்து ஒன்றில் மூவர் கொல்லப்பட்டதுடன் ஆறு பேர் காயமுற்றனர்.

★ அமெரிக்க ஜனாதிபதி டபிள்யூ புஷ் தனது 55 ஆவது பிறநததினத்தை தனது தந்தையாருடன் கொண்டாடுவதற்கு மெய்ன் வந்துள்ளார்.

★ சீனாவில் தடுத்து வைக்கப்பட்ட அமெரிக்க உளவு விமானம் அமெரிக்காவின் ஜோர்ஜியா விமானத் தளத்திற்கு திரும்பியுள்ளது.

★ ஜனாதிபதி புஷ் எப்.பி.ஐ. உளவுத் தலைவர் பதவிக்கு சமஷ்டி வழக்குத் தொடுநர்ரொபாட் முலெல்லரை நியமித்திருக்கிறார்.

★ அமெரிக்க சுங்க ஏஜென்ட்டுகள் 6310 றாத்தல் மர்ஜுவானா போதைப் பொருளை பனாமா நாட்டுக் கப்பலில் இருந்து கைப்பற்றியுள்ளனர். [க-03]

## கிளர்ச்சியாளர்களை பேச்சுக்கு அழைப்பு

(காட்மண்டு)

நேபாளத்தில் உள்ள பொதுவுடமைக் கிளர்ச்சி வாதிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையினை நடத்துவதற்கு தாம் தயாராக உள்ளதாக நேபாள அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசு சார்பாக இந்த அறிவித்தலை விடுத்த நேபாள பிரதம மந்திரி இது தொடர்பாக மேலும தெரிவிக்கையில்.

தாம் விடுத்த மேற்படி சமாதான அழைப்பிற்கு கிளர்ச்சிக்காரர்களிடம் இருந்து இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

வன்முறைகளைக் கைவிட்டு சமாதான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு பேசுவதன் மூலம் சுமுகமான தீர்வுகளை எட்ட முடியும் எனவும் நேபாளப் பிரதம மந்திரி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-9)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ தென் கொரியர்களின் கடமை உணர்வு

அதிக நேரம் அலுவலகங்களில் கடமையாற்றுபவர்கள் என்ற பெருமை தென் கொரியர்களைத் தான் சாரும் என்று சர்வதேச கணிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது.

இவர்கள் வாரத்தில் சுமார் 55 மணி நேரம் வேலை செய்வார்களாம். இந்த விடயத்தில் மிகமிக சோம்பேறிகளாக பிரான்ஸ் நாட்டவர்கள் காணப்படுகிறார்கள் இவர்கள் வாரத்தில் வேலையாற்றும் நேரம் ஆக 35 மணி நேரம் மட்டுமே; இவர்களுடன் ஒப்பிடும் போது 49 மணி நேரம் வேலை செய்கின்ற ஆசியர்கள் பரவாயில்லை அல்லவா? அமெரிக்கர்கள் 42 மணி நேரம் வேலை செய்கிறார்களாம்.

இதை விட பொதுவாக ஆண்களே பெண்களை விட அதிகளவு நேரம் ''அலுவலகங்களில்'' கடமையாற்றுகிறார்கள என்றும் கணிப்பிடப்பட்டுள்ளது

### ★ நாய்கள் வளர்த்த சிலி நாட்டுப் பையன்

பெற்றோரால் அனாதரவாக விடப்பட்ட சிறுவன் ஒருவன் இரண்டு வருடங்களாக நாய்களுடன் குகையில் உயிர் வாழ்ந்து அவற்றின் பாலையே காலை உணவாக குடித்து வந்தான் எனும் செய்தியை அறியும் போது நாம் படும் துன்பம் எல்லாம் எம்மாத்திரம்?

சிலி நாட்டைச் சேர்ந்த அலெக்ஸ் என்னும் இச்சிறுவன் தனது ஐந்தாவது வயதில் பெற்றோரால் கைவிடப்பட்டவன். நாய்களுடன் பழகி அவற்றின் உணவையே உண்டு வந்ததால் அவற்றின் நடத்தைகளையே இவன் வெளிக்காட்டுவதாகவும பேசத் தெரியாதவனாகவும் கைகளின் மூலமே உரையாடுவதாகவும் தெரிய வருகிறது.

உடல், உள ரீதியாகப் பாதிப்படைந்த இச் சிறுவன் இயல்புவாழ்விற்கு திரும்ப நீண்ட காலம் எடுக்குமென அதிகாரிகள தெரிவித்துள்ளார்கள்.

-அவதானி-

## பாட்டாளி மக்கள் கட்சியின் முடிவுக்கு பெர்ணாண்டஸ் வரவேற்பு

(புதுடில்லி)

அ இ அ தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகியுள்ள பாட்டாளி மக்கள் கட்சி, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைவது பற்றி வரும் 14ஆம் திகதி நடை பெறும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில தீர்மானிக்க இருப்பதாக பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதே வேளை பாட்டாளி மக்கள் கட்சி தேசிய ஜனநாயகக் கூட்டணியில சேரும் என்று நம்புவதாகவும அந்தக் கட்சியை தேசிய ஜனநாயகக் கூட்டணி வரவேற்கின்றது என்றும் கூட்டணியின் அமைப்பாளர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் தனியார் தொலைக் காட்சி ஒன்றிற்கு பேட்டி அளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். (உ-9)

## குருவாயூர் கோயிலுக்கு 5 தொன் சந்தனக்கட்டை வழங்க ஜெயா ஒப்புதல்

(குருவாயூர்)

குருவாயூர் கிருஷ்ணன் கோயிலுக்கு ஆண்டுதோறும் ஐந்து தொன் சந்தனக் கட்டைகளை வழங்க தமிழக முதல்வர் ஜெயலலிதா ஒப்புக் கொண்டுள்ளார்.

இதேவேளை, குருவாயூர் இறைவனைத் தரிசிக்கும் பக்தர்களின் வசதிக்காக மேலும் ஒரு பேருந்தினை நாள் தோறும் சேவையில் ஈடுபடுத்தவும் ஏற்பாடாகியுள்ளது.

அண்மையில் ஜெயலலிதா குருவாயூர் ஆலயத்திற்குச் சென்றிருநதபொழுது தேவஸ்தானத்தினர் விடுத்தவேண்டுகோளினை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (து)

பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர்கை விடல்

குறள்

## வலம்புரி

## வெள்ளைத் தோலர் புரியட்டும்!

தமிழ்ப்பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நாட்டில் சர்வ சாதாரணமாகி விட்டது.

பாலியல் வல்லுறவைத் தடுக்க வேண்டிய படையினரே அதனை முன்னின்று நடத்தும் கொடூரம் இன்னமும் தொடர் கதையாகவே உள்ளது

மருதானைச் சோதனைச் சாவடியில் வைத்து பொலிஸாரினால் மலையகத் தமிழ்ப் பெண் பாலியல் வல்லுறவுக்குட்பட்டதைக் கண்டித்து வடக்குக் கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட 48 மணி நேரத்திற்குள் மற்றொரு பாலியல் வல்லுறவு மீசாலை அல்லாரையில் இடம் பெற்றுள்ளது.

வயோதிபத் தாயுடன் தனிமையிலிருந்த பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய கொடூரத்தை எண்ணும் போது தமிழ் மண்ணை - தமிழ் மக்களைச் சூழ்ந்து ஈனக் கூட்டமொன்று சுற்றி நிற்பதை உணர முடிகிறது. அவர்களால் எந்த நேரத்திலும் மக்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதையே இந் நிகழ்வு சுட்டிக் காட்டுகிறது.

தனிமையிலிருக்கும் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய படையினர் தமதுகடமை தவறி இரவு வேளை வீடு புகுந்து தமது இச்சையைத் தீர்க்கப் புரியும் பலாத்காரம் குறித்து சர்வதேசம் ஒரு கணம் சிந்திக்க வேண்டும் கொடிகளைக்கட்டி உயரப் பறக்க விட்டு மதுப்புட்டிகளுடன் தமது சுக போக வாழ்க்கையை யாழ்ப்பாணத்தில் அனுபவித்துக் கொள்ளும் வெள்ளைத் தோலர் வெறுமனே வாடகை வீடுகளுக்கு வர்ணம் பூசி, வாசனைதடவி நாமும் ஏதோ சேவை செய்வதாகக் காட்டுவதை விடுத்து புலிகளைத் தடை செய்த நாடுகளுக்கு கைதடி முதல் அல்லாரை வரை நடந்த பாலியல் வல்லுறவுகளை எடுத்து - இடித்துரைக்க வேண்டும்.

வயோதிபத் தாயுடன் இருந்த 42 வயதுப் பெண்ணுக்கு இழைத்த துரோகத்தை சர்வதேசம் அறிய வேண்டும். அதிலும் இலங்காபுரியைத் தனியொரு இனத்திடம்தாரை வார்த்துக் கொடுத்து தமிழினத்திற்குத் துரோகம் செய்த பிரிட்டிஷாருக்கு அல்லாரையில் நடந்ததைத் தெரியப்படுத்துவது மிக மிக முக்கியமாகும்.

# நரை நீக்கும் கரிசலாங்கண்ணி நன் மருந்து

டாக்டர் எம். லோகமணியன் *M.D (S)*

கடிசாலை, கப்பாசிட்டே தாவர குடும்பத்தைச் சார்ந்தது. வெள்ளைக் கரிசாலை மற்றும் மஞ்சள் கரிசாலை Wedelia Calandulacea என்ற தாவர விஞ்ஞானப் பெயர்களைக் கொண்டது. நம்மக்கள் அறிந்த மருத்துவ மூலிகைகளுள் இதுவும் ஒன்று. சமஸ்கிருதத்தில்பிரிங்கராஜா என்றும் இந்தியில் பங்க்ரா என்றும் ஆந்திரா பகுதியில் குண்டசலகரா என்றும், கன்னடத்தில் கார்சா என்றும் தமிழகத்தில் கரிப்பான், கரிசலாங்கண்ணி, கரிசாலை,

## மருத்துவ விளக்கம்

கைகேசி, கையான்தகரை முதலிய பெயர்களாகவழங்கி வருகின்றது

### நான்கு வகை

காயகற்ப மூலிகைகளில் ஒன்றாக நம்முன்னோர்கள் கரிசாலையைப் பயன்படுத்தியதோடு நரையை நீக்கவும் பயன்படுத்தினர். இதன்பெயரிலேயே சற்றுக் கவனித்தால் கறுப்பு உள்ளடங்கியுள்ளதை அறியலாம். மலர்களைக் கொண்டு இதன் வகைகளை நான்காகக் கூறுவர். அவை நீலம், மஞ்சள், சிவப்பு மற்றும் வெள்ளை என்பன ஆனால் மஞ்சள், வெள்ளை கரிசலாங்கண்ணிகள்தான் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

மஞ்சள் காமாலைநோய்க்கு சித்தர்கள் கூறிய அரிய மருந்துகள் தற்போது ஆய்வு பூர்வமாக நிரூபிக்கப்பட்டு உலக அளவில் பயன்படுத்தும் அதே வேளையில், மீண்டும் கரிசாலை செய்கை பற்றி நம் முன்னோர்கள் கூறியதைக் கவனிப்போம் கரிசாலை சிறப்பானபித்தநீர் பெருக்கி, உடலுக்குச் சிறந்த உரமாக்கி உடல் தேற்றி வாந்தியுண்டாக்கி, நீர் மலம்போக்கி, வீக்கமுறுக்கி எல்லாவற்றிற்கும் மேலாக காமாலை போன்ற நோய்கள் வராமல் பாதுகாக்கும் மற்றும் ஈரல் தேற்றியாக இதன் செய்கையைக் கூறப்படுகின்றது.

அகத்தியர்எழுதிய குணவாகடம் என்ற நூலிலும் தேரன் எழுதிய தேரன் கரிசல் என்ற நூலிலும் இதன் பயன்களைப் பற்றி மேலும் விரிவாகக் கூறியுள்ளனர். மஞ்சள் கரிசாலை 100 கி. இருக்கும் கெமிக்கல் கொன்ஸிஸ்ரியூஷற் சத்து, ஒயில் சால்பபில் பிளாக்டை, டானிக், கரோட்டீன், சாபோனின், ஹார்மோன், பீட்டர்ஸ்ரெறஸ், வாக்ஸ் காம்பவுண்ட் இரும்புச்சத்து ரெஸின் மற்றும் சர்க்கரை போன்றவை காணப்படுகின்றன. கரிசாலைக் கீரையில் இரும்புச் சத்து உள்ளது.

ஆகவே, ''இளைத்தவன் இருப்பைத் தின்பான்'' என்று கூறியதுகரிசாலையைத்தான். கரிசாலையைத் துவையல் செய்து சாப்பிட இரும்புச் சத்து அதிகரிக்கும். ஈரல் சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

### தலைமுடி கறுக்கும்

கரிசாலைச் செடியின் மூலம் சிறந்த டொனிக் மற்றும் ஈரல்வீக்கம், மண்ணீரல் வீக்கம், தோல் நோய்களுக்கும் சிறந்தது. டைமாங் எனபவர் இலைச்சாற்றுடன் தேன் கலந்து தருவது குழந்தை மூக்கொழுதவதை நீக்கும், குழந்தைகளுக்குவரும் நோய்களுக்குச் சிறப்பாக இந்தியாவின் செல்வம் (Wealth of india) நூலில் கூறப்படுகின்றது.

இளநரை, முடி நரைத்தல் இவற்றுக்கு இலைச்சாறுடன் தேங்காய்எண்ணெய் காய்ச்சி தலைமுடிக்கு உபயோகிக்க முடி கருமைநிறம் அடையும் தன்மை உடையது. முடி கறுத்து வளர தலைமுடித் தைலத்துடன் சேர்த்துக் காய்ச்சுவது வழக்கம். மஞ்சள் காமாலைக்கு மேல் நாட்டவர்களும் இன்று நமது மருத்துவ மூலிகையான கீழாநெல்லியை ஏற்றுக் கொண்டு அதனால் செய்யப்பட்ட மருந்துகளைப் பயன்படுத்துவதுபோல, அதற்கு அடுத்து சிறப்பாக பட்டமேற்படிப்பில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதில் தேரன், அகத்தியர் போன்ற அறிஞர்கள் கூறிய கருத்துகள் ஆய்வுபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன கரிசலாங்கண்ணி வேரில் எக்லிப்டோன், நிகோடின் போன்ற ஆல்கலாய்டுகள் உள்ளதால் வாந்தியை உண்டு பண்ணும், கழிச்சல் உண்டாக்கும், இதன் இலைச்சாறு புண்களை ஆற்றும் தன்மையுடையது. ஸ்டெபிலோகாக்கஸ் நுண் கிருமிகளை அழிக்கும் தன்மையுடையது;

### வளர்ப்புமுறை

கரிசாலையில் மஞ்சள் மற்றும் வெள்ளை இரண்டும் ஒத்த குணத்தைப் பெற்றுள்ளன தண்டை நடுதலின் மூலம் இனப்பெருக்கம் செய்யலாம் ஒரு ஏக்கருக்கு 800 கிகிராம் முதல் 1000 கி. கிராம் வரை நாற்று தேவைப்படும்; இரண்டுமுறை நிலத்தை உழவு செய்தல் அவசியம் அதன்பிறகு தொழு உரம் இடவும் பின்பு மீண்டும் உழவு செய்து நீர்ப்பாய்ச்சி நெல் சாகுபடி செய்வதற்கு வயல் தயார் செய்வது போல தயார் செய்து. சேறு கலக்கி வயலில் நீர் தேங்கியிருக்கும் போது நாற்றுக்களை நடுகை செய்யலாம். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை நீர்ப் பாய்ச்ச வேண்டும்;

நடுகையின் பின் மூன்று மாதத்தில் அறுவடை செய்யலாம். அறுவடை செய்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக நீர்ப்பாய்ச்சுவதை நிறுத்திவிட்டு அறுவடை செய்யவும், அறுவடை செய்தபின் மீண்டும் நீர் பாய்ச்சுவதால் செடி மறுபடியும் வளர ஆரம்பிக்கும். □

# துப்பாக்கியை எடுத்துச்சென்றபோதே மாணவன் திவ்வியனை படையினர் கைதுசெய்தனர்

## பலாலி பாதுகாப்பு படைத் தலைமையகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடமாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனின் கைது தொடர்பாக யாழ் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று செய்திக் குறிப்பொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பிரிவின் மாணவனான 25வயதுடைய கிருஷ்ணசாமி திவ்வியன் என்ற மாணவன் உரப்பையினுள் ரீ 81ரக துப்பாக்கியை மறைத்து எடுத்துச் சென்ற சமயம் பாதுகாப்புப் படையினர் கடந்த 2001-07-02 ஆம் திகதி கோண்டாவில் பகுதியில் வைத்துகைது செய்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் இவருடன் சென்ற எல் ரீ.ரீ.ஈ இயக்கத்தின் கைத்துப்பாக்கிப் பிரிவைச் சேர்ந்த தலைவரான சசி என்பவர் தப்பிச்சென்றுள்ளார். படையினரால் கைது செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகமாணவன் புலிகள் இயக்கத்தின் கைத்துப்பாக்கிப் பிரிவைச் சேர்ந்தவர் என ஒப்புக் கொண்டுள்ளதுடன், இந்த மாணவன்வழங்கிய தகவலின் படிரீ 81ரக துப்பாக்கிமற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்கள்102, ஆர்பிஜி எறிகணை செலுத்தும் துப்பாக்கி ஒன்று கைத்துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் 40 குண்டுகளை வெடிக்கச் செய்வதற்கு உபயோகிக்கப்படும் வயர் 3 அடி, வாகனமொன்று, கணனி இயந்திரம், கணனி அச்சுப் பதிப்பு இயந்திரம், இரண்டு போட்டோகொப்பி இயந்திரம் ஒன்று. மின் உற்பத்தி இயந்திரம் (ஜெனரேட்டர்) ஒன்று என்பனவற்றையும் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த நாட்களுக்குள் அந்த கைத்துப்பாக்கி பிரிவினர் யாழ் நகரத்திற்குள் பொது மக்களிடமிருந்து நிதி சேகரித்தல், காயமடையும் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களுக்கு பல்கலைகழகத்தில் வைத்து சிகிச்சையளித்தல், ஆயுதங்களை பல்கலைகழக வளாகத்திலும், வெளி இடங்களிலும் சேகரித்து வைத்தல், பல்கலைகழக மாணவர்களை புதிதாக எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த வகையில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ள பல்கலைக்கழக மாணவனை இராணுவத்தினர் கைது செய்துள்ளதை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தற்போது பகிஷ்கரிப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் சந்தேக நபரை பார்ப்பதற்கு யாழ் பல்கலைகழகத்தின் துணைவேந்தர், மற்றும் விஞ்ஞான பீடத்தின் முக்கியஸ்தர் உற்பட விஞ்ஞான பீட மாணவகள் நான்கு பேருக்கு படையினர் அனுமதி வழங்கியிருந்தனர். இவர்கள் முன்னிலையில் தான் குற்றச் செயலில்ஈடுபட்டதாக தெளிவாக கூறியுள்ளார்.

இதனால் பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்படும் பகிஷ்கரிப்பு போராட்டங்களை கைவிடுவதற்கு ஒழுங்குசெய்து தருவதாக இந்தக்குழுவினர் பாதுகாப்பு படையினரிடம் உறுதியளித்துள்ளார்கள் இருப்பினும் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவதால் 2001. 07 09திகதி யாழ்பாதுகாப்பு தலைமையகத்தின் கட்டளை அதிகாரியின் தலைமையில் விசேட கலந்துரையாடல் பலாலி தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் பல்கலைக்கழக துணைவேந்தர், விரிவுரையாளர், மற்றும் மாணவர்ஒன்றியத்தின் சிரேஷ்டமாணவர்கள் நால்வரும் கலந்துகொண்டனர் மேற்படி மாணவன் விடுதலைப்புலிகள் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறித்து தகுந்தஆதாரங்கள் கிடைத்துள்ளதால் அவரது விடுதலை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என தலைமையக கட்டளைஅதிகாரி பல்கலைக்கழக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளதுடன் மேலும் பகிஷ்கரிப்பை கைவிடுமாறும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய சமூகமாணவர்களிடம் கேட்டுள்ளார்.

ஆனால் இந்தவிடயம் தொடர்பாக சகபீட மாணவர்களையும் சந்தித்துவிட்டு பதில் கூறுவதாகமாணவஒன்றிய உறுப்பினர்கள் கட்டளை அதிகாரிகளிடம் தெரிவித்தார்கள்.

இந்தநடவடிக்கைகள் தொடர்பாகவும் பல்கலைக்கழக மாணவனின்கைது குறித்து உண்மைக்குமாறான பல்வேறு தகவல்தொடர்பு சாதனங்கள் மூலமாகவெளியிடப்படுவதால் இதுபோன்ற அசாதாரமான போராட்டங்களில் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களை தவறான வழியில் அனுப்புவதற்கு இடமளிக்காதீர்கள் எனயாழ் பாதுகாப்பு கட்டளைஅதிகாரி பெற்றோர்களிடமும் ஆசிரியர்களிடமும் கேட்டுள்ளார்.

(இ)

# பாலியல் வல்லுறவுசர்பவம் மிலேச்சத்தனமான செயல்

## அமைச்சர் டக்ளஸ்கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அல்லாரையில் வயோதிபத் தாயுடன் வீட்டில் தங்கி இருந்த பெண், பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் மிலேச்சத்தனமானதும் கண்டிக்கத் தக்கதுமென்று வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவலை வெளியிட்டுள்ளார்.

சம்பவம் பற்றி தென்மராட்சி படைத்தளபதியை சந்தித்து உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்

[8ஆம் பக்கம் பார்க்க

# ஒரு வருடம் முடிந்தவுடன் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும்

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசொன்றை அமைப்பது தொடர்பாக இன்மேல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுக்கள் எதிலும் ஈடுபடப்போவதில்லை என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஆசிய சம்பியன் விளையாட்டுப்போட்டி 2002-ம் ஆண்டு இலங்கையில் நடைபெறுவதை முன்னிட்டு கொழும்பு ஓரல் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசுபோதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசுக்கு ஏற்பட்ட இக்கட்டான சூழலில் ஆரம்பத்தில் தேசிய அரசாங்கமொன்றை அமைக்க, ஐக்கிய தேசியக் கட்சி ஓரளவு இணங்கியது.

கூடிய அதிகாரங்கள் அடங்கிய முக்கிய பதவிகளைத் தமக்கு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே தேசிய அரசு அமைக்க ஐக்கியதேசியக்கட்சி இணக்கம் தெரிவித்திருந்தது. இந் நிபந்தனையை தாம் நிராகரித்ததாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனநாயக முறைக்கமைய ஒரு வருடத்தின்பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்தவுள்ளதாகவும் பிரதமர் சூசகமாகத்தெரிவித்துள்ளார். (இ)

### பாராளுமன்றகுழு கூட்டம் நாளை

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி மீது கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அடுத்து எழுந்துள்ளநிலைமைகளை ஆராய்வதற்காக அரசின் பாராளுமன்றக்குழு நாளை கூடவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் கூடவுள்ள இக்கூட்டத்தில், கட்சியின் 10 எம்.பிகள்மற்றும் பிரதிஅமைச்சர்களின் கோரிக்கைகள் தொடர்பாகவும் ஆராயவுள்ளதுடன், அரசைக் காப்பாற்றும் அனைத்து வழிகளும் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது; (வ)

# பொ.ஐ.ஐ.முன்னணி அரசாங்கத்தை ஐ.தே.கட்சியால் கவிழ்க்கமுடியாது

## பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கவிழ்ப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கை எடுத்தாலும் அவர்களால் அரசைக் கவிழ்க்க முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சந்திக்க நாம் தயாராகவுள்ளோம் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று மாலையில் பெருந்தோட்டத் தொழிலாளர் தொடர்புடைய வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்து தொடர்பாக அங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர்,

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே தெரிவித்து விட்டோம். விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும்.

அவர்கள் தான் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்றும் தெரிவித்தார்;

விடுதலைப் புலிகளைத் தடை செய்தமை தொடர்பாக நீதிமன்றில் சந்திக்கவும் தயாராக உள்ளோம் என்றும் பிரதமர் கூறினார், (வ)

### ஐ. சி. ஆர். சி பார்வையிட்டது

(பருத்தித்துறை)

மீசாலை அல்லாரைப்பகுதியில் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட பெண்ணை பொலிஸ் உயரதிகாரிகள், மற்றும்ஐ.சி ஆர்.சி அமைப்பினர், நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலத்தையும்பெற்றுக்கொண்டனர்;

கடந்த சனிக்கிழமை இரவு 8.30மணியளவில் வீட்டிற்குள் நுழைந்த சீருடை தரித்த இருவர் வீட்டிலிருந்து300மீற்றர் தூரத்திலுள்ள வயல் பகுதிக்கு தன்னை இழுத்துச் சென்று பலாத்காரம் செய்ததாகபிரஸ்தாபப் பெண்தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ந- 5- 23)

### அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

மருதானைச் சோதனைச் சாவடியில் தமிழ்ப் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பாக சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற இவ் அடையாள அணிவகுப்பில் இரண்டு பொலிசார், ஒரு இராணுவ வீரர் உட்பட ஆறு சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

அடையாளம் காணப்பட்ட ஆறு பேரையும் எதிர்வரும் 18ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாவத்தை நீதவான் குசலா சறோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டுள்ளார். (ந-5)

ராஜா
யாழ்ப்பாணம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
சிட்டிசன்
தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே]
(கி-2125)

### அத்தியடி சம்பவம்
# 13 மாணவர்களையும் நீதிபதி விடுதலை செய்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடிப் பகுதியில் சட்டத்தரணியொருவரின் வீட்டில்புகுந்து அட்டகாசம் புரிந்து குற்றம் செய்த 13 மாணவர்களும் நேற்று நீதவான் இ.த.விக்கினராஜாவினால் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்பிரபல பாடசாலைகளில் கல்விபயிலும் மேற்படி மாணவர்களின் நன்னடத்தைகள் மூன்று வருடங்களுக்கு அவதானிக்கப்படுமென அறிவித்த நீதிபதி, 13 மாணவர்கள் மீதும் குறிப்பிட்ட பாடசாலைகள் ஒழுங்காற்று நடவடிக்கைகள் எதனையும்மேற்கொள்ளமாட்டாதென தான் நம்புவதாகவும் தெரிவித்தார். (இ-6)

### ஐம்பது.-

கைவிடப்பட்டது

(விடுதலை பற்றிய செய்தி 2-ம் பக்கத்தில்) (ந)

### யாழ்..

துள்ளதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

இச்சந்திப்பின் போது பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை பேராசிரியர் சிற்றம்பலம், மாணவர்ஒன்றியத் தலைவர் கஜேந்திரா, விஞ்ஞான பீட மாணவர் மன்றத் தலைவர் பொன். திவாகரன் கலைப்பீடமாணவர் மன்ற செயலாளர்அன்ரன் சில்வெஸ்டர், மாணவர் ஒன்றிய பொருளாளர் சஞ்சயன் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ)

### புலிகளை..

தாக அமைக்கப்பட்டுள்ள றொக்கட் றெஜிமென்ற்பிரிவு இந்தியப் படைகளிடம் கூட இல்லையெனவும், இப்படையணியில் நன்குபயிற்சிபெற்ற படையினரே உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது (இ)

### அல்லாரை-.

பெண்ணின் வயிற்றுப்பகுதியில் பலமான கடிகாயங்கள் காணப்படுவதுடன் இடுப்புப் பகுதியில் கீறல் காயங்கள் காணப் படுவதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

### மிலேச்சத்தனமான..-

சர் தனது பிரதிநிதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்

இதற்கமைய வலி மேற்கு பிரதேசபைத் தலைவர் ந.திரிலோகநாதன் மற்றும் தென்மராட்சிப் பொறுப்பாளர் சாள்ஸ் ஆகியோர் 52வது படையணித்தளபதி ஜெனரல் எஸ். குலதுங்காவை நேற்றுச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பில் மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளை திசைதிருப்பாது சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தி, சம்மந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்தி நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது;

அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணை மந்திகை மருத்துவமனைக்குச் சென்று ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள்பார்வையிட்டுள்ளனர்; (இ)

### தமிழக ஆளுநர்
# பதவி விலகல் மத்திய அமைச்சர் பாராட்டு

[புதுடில்லி]

கடமையிலிருந்து தவறிய தமிழக ஆளுநர் பாத்திமா பீபியை பதவியில் இருந்து தூக்கி எறிந்தமை சரியான நடவடிக்கையே என மத்திய அமைச்சர் அருண்ஜெட்லி உறுதிபடத் தெரிவித்துள்ளார்;

பாத்திமா பீபிபதவிபறிக்கப்பட்ட மேற்படி நடவடிக்கையில் தவறானநடைமுறை எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை அவரை நாங்கள் அவசரப்பட்டு பதவியிலிருந்து நீக்கவில்லை நேர்மையான அறிக்கை தர அவருக்கு கால அவகாசம் வழங்கினோம். ஆனால் அவர் உண்மைக்குப் புறம்பான அறிக்கையை வழங்கியதுடன் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் முயற்சித்தார் எனவேதான் அவரது பதவியை பறிக்க வேண்டியதாயிற்று என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

### திவ்வியன்..

கள், திட்டமிட்ட கைதுகளை நியாயப்படுத்தாதே, திவ்வியனை விடுதலை செய் அகிம்சைக்குத் தடையெனின் மாற்று வழி என்ன? மாணவர்களின் கைகளை நசுக்காதே, போன்ற சுலோகங்களைத் தாங்கிச் சென்றனர்;

ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்திற்கு பேராசிரியர் நந்தகுமார் உட்பட மற்றும் பலரும் சமூகம் கொடுத்திருந்தனர்.

இதேவேளை திவ்வியனின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரைக் கேட்டுக் கொள்ளும் மகஜர் ஒன்றும் மாணவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது; [ம]

### யாழ் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பொது அறிவித்தலின் பிரகாரம் மூடப்படுவது இது மூன்றாவது தடவையாகும்.

யாழ்.பல்கலைக் கழகம் இன்றுடன் மூடப்படுவதால் விடுதிகளில்தங்கியுள்ள யாழ். மாவட்ட மாணவர்கள் நாளை 11 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 5 மணிக்கு முன்னதாக விடுதிகளில் இருந்த வெளியேற வேண்டும் என்றும், ஏனைய வெளி மாவட்ட மாணவர்கள் பல்கலைக்கழகவிடுதிகளை விட்டு வெளியேறுவது தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் என்றும் துணை வேந்தர் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கும் காலங்களில்மாணவர்கள எவரும்பல்கலைக்கழக கல்விசார் துறை கட்டடங்களுக்குள்ளோ நிர்வாகம் சார் கட்டடங்களுக்குள்ளோ அல்லது அவைஅமைந்துள்ள வளவுக்குள்ளோ பிரவேசிப்பது தடைசெய்யப் பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க பல்கலைக்கழகம் மூடப்பட்ட நிலையில் மாணவரின் பகிஷ்கரிப்புப் போராட்டம்மேலும் தீவிரமடைந்து பாடசாலை மட்டம்வரை பரவலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது; (வ)

## அறிவித்தல்

மாண்புமிகு உயர்கல்வி தகவல் தொழில்நுட்ப அமைச்சரின் கட்டளைக்கமைய, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவரினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 10 07-2001 முதல் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

விடுதியில் உள்ள யாழ் மாவட்ட மாணவர்கள் தத்தம் விடுதிகளில் இருந்து 11.7.2001 பிற்பகல் 5 மணிக்கு முன்னதாக வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விடுதியில் உள்ள வெளி மாவட்ட மாணவர்களுக்கான ஒழுங்குகள் பற்றி பின்னர் அறி-விக்கப்படும். விடுதியில் இருக்கும் மாணவர்களோ, ஏனைய மாணவர்களோ பல்கலைக்கழக கல்விசார்துறைக் கட்டடங்களுக்குள்ளோ நிர்வாகம்சார் கட்டடங்களுக்குள்ளோ, அவை அமைந்திருக்கும் வளவுகளுக்குள்ளோ பிரவேசிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

துணைவேந்தர்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

(கி-2193)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ நிறுவனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலை மாதம் 10 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.